**வடமத்திய மாகாண சபை - 2013**

வடமத்திய மாகாண சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் அடங்கிய கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பான விரிவான அறிக்கை மாகாண சபையில் முன்வைக்கப்படுவதன் பொருட்டு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அனுசரணையாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வடமத்திய மாகாண சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியம்

மாகாண சபை நிதியத்துடன் தொடர்புடைய மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதிலான முன்னேற்றம் கீழே காணப்படுகின்றது.

| | | 2013 ஆம் ஆண்டிற்கானவை | | | முன்னைய ஆண்டுகளுக் கானவை |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளது மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளது எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை | சமர்பபிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 30 | 30 | - | - |
| (ii) | வருவாய்க் கணக்குகள் | 23 | 23 | - | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக் கான முற்பணக் கணக்குகள் | 61 | 47 | 14 | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 6 | 5 | 1 | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 7 | 1 | 6 | 17 |
| (vi) | சட்டவாக்கக் கணக்குகள் | 5 | 4 | 1 | - |
| (vii) | சுயதொழில் சுழற்சிக் கடன்முற்பணக் கணக்குகள் | 1 | 1 | - | 2 |
| | | 133 | 111 | 22 | 19 |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

மாகாண சபை நிதியத்தினது சகல வருவாய் மற்றும் செலவினக் கணக்குகள் காசு அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 8,817,058,688 ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் என்பவற்றில் மொத்தச் சம்பளமும் வேதனமும் ஆகிய ரூபா 4,663,675,773 உள்ளடங்கியிருந்தது. எனினும், அச்சம்பளம் மற்றும் வேதனம் என்பவற்றிலிருந்து அறவிடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணம் மீதான தவணைப் பணமும் வட்டியும், வீட்டு வாடகை போன்றவற்றிற்குத் தேவையான சீராக்கல் செய்யப்படவில்லை. இக்காரணத்தால் காசுப்பாய்ச்சலானது அறவீடுகளின் தொகைக்கு நிகராக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளின் பிரகாரம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவித்தபோதும், மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களுக்குரிய 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 119,806,619 பொறுப்புகள் நடைமுறைப் பொறுப்பாகவும் மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 494,620,243 க்கான சொத்துக்கள் அடங்கலாக மாகாண சபை ஆரம்பமாகிய 1988 மே 12 தொடக்கம் மீளாய்வாண்டு முடிவு வரை மாகாண சபை நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சகல சொத்துக்களும், சொத்துக்களாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) வட மத்திய மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுவதும் அங்கீகரிக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வராதுள்ளதுமான ரூபா 19,340,075 க்கான 4 நிதியங்களின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் போது அந்நிதியங்களின் மூலம் சம்பாதித்த வட்டி வருவாயாகிய ரூபா 1,832,096 என்பன நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

| | நிதியம் | வட்டி வருவாய் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சுனாமி உதவி நிதியம் | 151,972 | 445,315 |
| மாங்குளம் புகையிரத நிலைய அபிவிருத்தி நிதியம் | 4,328,320 | 643,560 |
| ரனவிறு சேவை நிதியம் | 6,102,235 | 9,589 |
| கமநல உற்பத்தி விற்பனை சுழற்சி நிதியம் | 8,757,548 | 733,632 |
| | 19,340,075 | 1,832,096 |

(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலான பாச்சலின் கீழ் காட்டப்படவேண்டிய முதலீடு வட்டிப் பெறுவனவான ரூபா 121,421,578 செயற்பாட்டு நடவடிக்கைகளிலான பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் 6 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 3,636,315,085 ஆகும். கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் அம் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 3,265,862,998 ஆகும்.

| கணக்கீட்டு விடயம் | கட்டுப்பாட்டுக் கணக்கு | நிதிசார் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் படியான மீதி | கட்டுப்பாட்டுக் கணக்கின்படியான மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| அரச மூலதன மானியம் | 317 ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 3,134,869,730 | 3,109,471,581 | 25,398,149 |
| வருவாய் | வருவாய்க் கணக்கு | 24,122,840 | 16,257,299 | 7,865,541 |
| 4 பொது வைப்புக் கணக்குகளது மீதி | பொது வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கினது பொழிப்பு | 328,678,218 | 89,181,998 | 239,496,220 |
| 2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளது வரவு மீதிகள் | முற்பணக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கினது பொழிப்பு | 14,420,686 | 14,660,379 | (239,693) |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 வணிக முற்பணக் கணக்குகளது வரவு மீதி | முற்பணக்கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளது பொழிப்பு | 28,288,263 | 25,218,263 | 3,070,000 |
| கட்டுநிதி மீதிகள் | கட்டுநிதிக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கினது பொழிப்பு | 5,935,348 | 11,073,478 | (5,138,130) |
| | | 3,636,315,085 | 3,265,862,998 | |

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வருவன அதானிக்கப்பட்டன.

#### (அ) பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டு தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்குள் 24 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்குள் 11 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2013 நவெம்பர் 03 ஆந் திகதியளவிலும் பதில் கிடைக்கப்பெறாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குப் பாத்திரமான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 2,246,081,395 ஆகும்.

#### (ஆ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை

மாகாண சபையின் 19 பல்வேறு நிறுவனங்களால் மீளாய்வாண்டின்போது நிலையான சொத்துப் பதிவேடுகள், இழப்புகள் மற்றும் நட்டங்களது பதிவேடுகள், பொறுப்புகளுக்கான பதிவேடுகள், பேரேட்டுக் கணக்குகள், பொருட்குறிப்புப் பதிவேடுகள், கடன்பட்டோர்/ கடன்கொர்டுத்தோர் பதிவேடுகள், முற்பணப் பதிவேடுகள் என்பன பேணப்படாதிருந்தன.

#### (இ) தகவல்களைச் சமர்ப்பிக்காமை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) நலன் பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்காக ஒரு மாகாண அமைச்சாலும் 2 திணைக்களங்களாலும் ரூபா 1,162,408 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட பல்வேறு உபகரணங்கள் அந்த நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டதைக் குறிக்கும் நிரல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| நிறுவனம் | கொள்வனவு செய்யப்பட்ட பொருள் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் | 1000 பெட்டிகள், 5 தேக்கு மேசைகள், 1 சலவை இயந்திரம் | 294,600 |
| மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம், கலாசார அலுவல்கள் அமைச்சு | 2 ஒலிபெருக்கிகள், 318 அஸ்பஸ்டஸ் தகடுகள், 169 மண்வெட்டிகள், 8 தையல் இயந்திரங்கள் | 289,040 |
| மாகாண கமத்தொழில் திணைக்களம் | ஒவ்வொன்றும் 2 கிலோ கிராமுடைய 4000 நெல் பக்கெட்கள், 31150 பெரசூட் தட்டுக்கள் | 578,768 |
| | | 1,162,408 |

(ii) மாகாண விலங்கினப் பொருள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், பட்டிநிலையம், பிரதேச விலங்கியல் மருத்துவ நிலையம் என்பவற்றிற்குச் சொந்தமான காணி மற்றும் அதனது உரித்தை உறுதி செய்வதற்கான உரித்துறுதி அல்லது உரித்துச் சான்றிதழ் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) வட மத்திய மாகாண சபையின் முதலாவது உத்தியோகபூர்வ காலப்பகுதியின்போது தகவல் கூறுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி புலப்படாத வீடியோ கெமரா அடங்கலான சகல உபகரணங்களும் தொலைந்து போயின. பிரதான அமைச்சினது கணக்காளரிடம் அவை 1999 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டபோதும், அவ்வுபகரணங்களைக் கணக்காளர் பெற்றுக்கொண்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பிக்காமை**

பிரதான அமைச்சினதும் மாகாண சுகாதாரத் திணைக்களத்தினதும் ரூபா 19,329,891 கூட்டுத்தொகைப் பெறுமதிக்குரிய 96 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவு செய்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) அதிகாரச் சட்டங்கள்** | |
| (i) 1958 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ந்த 20 ஊழியர்களது 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையான ரூபா 943,559 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு உதவு தொகையான ரூபா 141,534 என்பவற்றைக் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் | 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் |

| | | |
|---|---|---|
| | | பிரதான அமைப்பாளர் மற்றும் எதிர்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆகிய பதவிகளை உருவாக்கி, அப்பதவிகளில் அங்கத்தவர்களை நியமித்து, அவர்களுக்கு அங்கத்தவர் ஒருவருக்குரித்தல்லாத வரப்பிரதசாதங்களை வழங்கி அவ்வரப்பிரசாதங்களின் பொருட்டு 2013 ஆம் ஆண்டில் மாகாண சபை மற்றும் சபைச் செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றால் ரூபா 6,392,063 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு | பிரதான அமைச்சால் பெறப்பட்ட வழங்கல்களுக்கும் சேவைகளுக்கும் வரி இன்வொய்சுகளைச் சமர்ப்பிக்காது 8 வழங்குநர்களுக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 1,727,135 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2002 செப்டம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அக்கொடுப்பனவு விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படவில்லை. |

**(ஆ) தாபன விதிக்கோவை**

---------------------------------------

| | |
|---|---|
| XX அத்தியாயத்தினது 5.2 மற்றும் 5.3 ஆம் பந்திகள் | அனுராதபுரம் மாவட்டத்தில் தம்புத்தேகம, ராஜாங்கனை யாய 05, கலென்பிந்துனுவெவ, கஹடகஸ்திகிலிய மற்றும் சேனபுர ஆகிய 5 வைத்தியசாலைகளுக்குரிய உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகையாகிய ரூபா 183,596 |

| | |
|---|---|
| | அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| XX அத்தியாயத்தினது 12 ஆம் பந்தி | கள உத்தியோகத்தர்களுக்கு ஒருங்கு திரட்டிய பயணச் செலவினப் படி வழங்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின்போது அனுராதபுரம் மாவட்ட விலங்கியல் மருத்துவ அலுவலகத்தின் விலங்கின அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு திவிநெகும் தேசிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போக்குவரத்துச் செலவினமும் சீவனப்படியுமாக ரூபா 115,258 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

**(இ) மாகாண நிதிசார் விதிகள்**

| | |
|---|---|
| (i) 177 | மாகாணக் கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் சான்றுறுதிப்படுத்தப்படாத 25 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் பொருட்டு ரூபா 873,022 வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 261.2.2. | குறித்த ஒரு வேலைக்கென வழங்கப்படக் கூடிய ரூபா 100,000 கட்டுநிதி வரம்பிற்கு அதிகமாக மாகாண கல்வித் திணைக்களத்தால் நுவரேலியாவில் நடைபெற்ற கல்வி கணநலன் நிகழ்ச்சிக்காக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 889,262 குறித்த வேலைக்கான கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) 471.1 | மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம், கலாசார நடவடிக்கைகள் அமைச்சுக்கு தலைமைச் செயலாளர் அலுவலகத்தால் |

| | | |
|---|---|---|
| | | வழங்கப்பட்ட ரூபா 461,308 பெறுமதியான பொருட்களும் மீளாய்வாண்டின்போதும் முன்னைய ஆண்டுகளிலும் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,603,942 பெறுமதியான தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் அமைச்சினது பொருட்பதிவுப் பதிவேட்டில் குறித்துக் கொள்ளப்படவில்லை. |
| (ஈ) | 2004 ஜனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க மாண்புமிகு சனாதிபதியின் சுற்றறிக்கையினது 3.1 ஆம் பந்தி | மாகாண சபை அமைச்சர் ஒருவருக்கு ஒரு உத்தியோகபூர்வத் தொலைபேசியே வழங்கப்படலாமெனினும், மீளாய்வாண்டின்போது கமத்தொழில் அமைச்சருக்கு 2 உத்தியோகபூர்வ மனைகளுக்கென 3 தொலைபேசிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 11/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சகல வாகனங்களதும் எரிபொருள் நுகர்வு 6 மாதங்களுக்கொருமுறை பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும், மாகாண சபையினது வாகனங்களில் எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |
| (ஊ) | 206 பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவை | மாகாண சபைச் செயலாளரது அலுவலகத்தால் மீளாய்வாண்டில் 5 சந்தர்ப்பங்களில் ரூபா 1,634,831 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களும் சேவைகளும் பொருட் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக நடைபெற்றிருந்தன. |

### 2.2.8 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) டிசெம்பர் 31 இல் சேமிப்புக்குள்ளான கட்டுநிதி மீதி அடுத்துவரும் ஜனவரி 10 க்கு முன்னர் அல்லது திறைசேரியால் குறிக்கப்படும் ஒரு திகதிக்கு முன்னர் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த 25 கட்டுநிதிக் கணக்குகளது வரவு மீதி கூட்டுத்தொகையாகிய ரூபா 385,183,708 காணப்பட்டதுடன் அதில் 83 சதவீதமாகிய ரூபா 318,744,138 ஆன மீதியானது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் மாகாண அமைச்சுக்கள் திணைக்கங்கள் அடங்கலாக 12 நிறுவனங்களால் தீர்த்து வைக்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த கட்டுநிதி மீதியாகிய ரூபா 11,136,395 நான்கு ஆண்டுகளுக்கு மேலாக மீண்டுவருவனவாக இருந்தன. அம்மீதிகள் சரியனவையா என்பதை உறுதி செய்வதற்கான எழுத்து மூல ஆதாரங்கள் அந்நிறுவனங்களிடம் இருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணத் திறைசேரி மற்றும் மாகாண கமத்தொழில் திணைக்களம் என்பன தீர்த்து வைக்கப்படாத ரூபா 32,378 கூட்டுத்தொகையுடைய கட்டுநிதி மீதிகளைக் கொண்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் பத்தினது செலவு மீதி ஆகிய ரூபா 2,725,042 கூட்டுத்தொகையும் வணிக முற்பணக் கணக்கு ஒன்றினது ரூபா 512,132 செலவு மீதியும் இருந்தன. அம்மீதிகளுக்குள் மீளாய்வாண்டில் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத அல்லது செலவு மீதிகளை மேலும் அதிகரிக்குமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,685,324 கூடுடுத்தொகையுடைய 3 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு விடயங்களது மீதியும் உள்ளடங்கியிருந்தன.

(உ) 2009 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் பயிற்சிப் படிகளுக்கான கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 2009 ஜுலை 8 ஆந் திகதிய என்சீபீ/சீஎம்/ஈடீ/8/III இலக்க ஆளுநரது செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம், கலாசார

அலுவல்கள் அமைச்சினால் மீளாய்வாண்டின்போது 12 சந்தர்ப்பங்களில் நாட்டிய மற்றும் சங்கீதக் குழு ஒன்றிற்கு ரூபா 1,715,000 பயிற்சிப் படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஜூலை 23 ஆந் திகதிய 25 ஆம் இலக்க பொருட்கொள்வனவு வழிகாட்டிக்கான மேலதிக இணைப்பின் பிரகாரம், பொருட்கொள்வனவு வழிகாட்டல் 2.9.1 க்கமைய சந்தை விலைக் கோரல் மற்றும் நேரடி ஒப்பந்த நடைமுறையைப் பின்பற்றுகையில் ரூபா 2 மில்லியனுக்குக் குறைவான கொள்வனவுகளுக்கான கொள்வனவுக் குழு அங்கத்தவர்களுக்கும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர்களுக்கும் வேறுபட்ட அங்கத்தவர்களுக்கும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஏனைய உதவி உத்தியோகத்தர்களுக்கும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்குக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாகாது. எனினும், 2013 ஆம் ஆண்டில் அவ்வாறானதொரு வரம்புக்குக் குறைந்த கொள்வனவு நடவடிக்கைகளுக்கு ஒரு 9 மாகாண சபை நிறுவனங்களால் 184 குழுக்களின் பொருட்டு ரூபா 838,850 படியாக வழங்கப்பட்டிருந்தது.

(எ) பொறியியல் ரீதியான நிர்மாண வேலைகளுக்கு உசாத்துணைச் சேவைகளை வழங்குதல் வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களத்தின் பிரதான பணியாகும். எவ்வாறாயினும், மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தால் 50 கடைத் தொகுதி நிர்மாண வேலைச் செயற்திட்டமிருந்து பொறியியல் ரீதியான உசாத்துணை பெறப்பட்டு 2009-2013 காலப்பகுதியின்போது அந்நிறுவனத்திற்கு ரூபா 3,290,592 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மான்புமிகு அமைச்சுக்கள் மற்றும் ஆளுநரின் பொருட்டு வருடாந்தம் ரூபா 1,387,391 ஆயற் காப்புறுதி தவணைப் பணமாக மாகாண சபை மற்றும் சபைச் செயலாளர் அலுவலகச் செலவினத் தலைப்புகளிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவிற்கான முறையான அங்கீகாரம் மற்றும் அக்கொடுப்பனவை உறுதி செய்வதற்கான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது வேறு எழுத்துமூல ஆதாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. வருவாய் முகாமைத்துவம்

மாகாண சபையினது 23 வருவாய்த் தலைப்புகளின் கீழ் மீளாய்வாண்டின்போது ரூபா 2,326,770,418 வருவாயாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் வருவாயாகிய ரூபா 2,228,034,190 உடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 4 சதவீதமாகிய ரூபா 98,736,228 முன்னேற்றம் காணப்பட்டபோதும், முன்னைய ஆண்டின் முன்னேற்றம் நூற்றுக்கு 13 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 255,161,918 ஆகவிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டினது 23 தலைப்புகளின் கீழான வருவாயானது மாகாண சபையினது மொத்த வருவாயில் 23 சதவீதமாகும். முன்னைய ஆண்டில் இது 25 சதவீதமாக இருந்தது. சில பிரதான வருவாய்த தலைப்புகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

| வருவாய்த்தலைப்பு இலக்கமும் விபரமும் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருவாய் | அதிகரிப்பு (குறைவு) | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 10-03-01-01 மோட்டார் வாகன வருவாய் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 255,000,000 | 350,171,800 | 95,171,800 | 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 29,756,828 வருவாய் நிலுவையில் அறவிடப்பட்டவற்றை இணங்காணும் விதத்தில் கணக்குகள் பேணப்படவில்லை. |
| 10-02-07-00 முத்திரை வருவாய் | 255,000,000 | 349,218,520 | 124,218,520 | மதிப்பிடப்பட்ட வருவாயிலும் பார்க்க் 55 சதவீத அதிகரித்த முத்திரை வருவாய்ச் சேகரிப்பு இருந்தது. |
| 20-02-01-01 வீட்டு வாடகை | 14,000,000 | 15,315,195 | 1,315,195 | மதிப்பிடப்பட்ட வருவாயிலும் பார்க்க ரூபா 1,315,195 கூடுதலான வீட்டு வாடகை மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 20-02-02-03 முதலீட்டு வட்டி | 90,000,000 | 121,421,578 | 31,421,578 | மதிப்பிடப்பட்ட வருவாயினை ரூபா 31,421,578 இனால் விஞ்சிய வருவாய் சேகரிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பீடானது சாத்தியமற்றதும் பிழையற்றதும் அல்ல என அவதானிக்கப்பட்டது. |
| 10-02-12-00 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 1,625,000,000 | 965,554,103 | 659,445,897 | மீளாய்வாண்டினது சேகரிப்பு வருவாய் மதிப்பிடப்பட்ட தொகையிலும் ரூபா 659,445,897 குறைவானதாகும். |
| 20-03-03-04 மோட்டார் வாகனங்களுக்கான தண்டப் பணம் | 5,000,000 | 19,497,218 | 14,497,218 | மதிப்பிடப்பட்ட வருவாயிலும் நூற்றுக்கு 290 சதவீத அதிகரித்த வருவாய்ச் சேகரிப்பானது மதிப்பீடு சாத்தியமற்றதும் பிழையற்றது அல்ல எனவும் அவதானிக்கப்பட்டது. |
| 10-02-09-00 வியாபாரப்புரள்வு வரி | 6,000,000 | 2,798,461 | 3,201,539 | மீளாய்வாண்டின் உள்ளவாறான வியாபாரப் புரள்வு வரி மதிப்பீட்டு வருவாயிலும் 53 சதவீதம் குறைவானதாகும் |
| 10-02-04-05 உள்ளூர் மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணம் | 24,000.000 | 16,254,046 | 7,745,954 | மீளாய்வாண்டின் உள்ளவாறான வருவாய் மதிப்பீட்டு வருவாயிலும் 32 சதவீதம் குறைவானதாகும் |
| 10-02-07-01 சொத்துச் சுவீகரிப்பிற்கான முத்திரைக் கட்டணம் | 52,000,000 | 63,377,442 | 13,377,442 | மீளாய்வாண்டின் வருவாய் சேகரிப்பு மதிப்பீட்டு வருவாயிலும் 26 சதவீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கூடியதாகும். |
| 10-02-05-04 மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணத்தை ஏற்றல் | 50,000,000 | 97,207,570 | 47,207,570 | சேகரிக்கப்பட்ட வருவாய் மதிப்பீட்டு வருவாயிலும் 94 சதவீதம் கூடியதாகும். |
| 20-03-03-01 நீதிமன்றத் தண்டப்பணம் | 180,000,000 | 152,413,895 | 27,581,105 | மதிப்பீட்டு வருவாயிலும் 15 சதவீதம் குறைவான வருவாயே மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றது. |
| 20-02-01-03 காணி வரி | 70,000,000 | 73,989,734 | 3,989,734 | சேகரிக்கப்பட்ட வருவாய் மதிப்பிடப்பட்ட வருவாயிலும் ரூபா 3,989,734 கூடியதாகும். |

(அ) உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் சேகரிக்கப்படும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் 1/3 பங்கு ஒவ்வொரு மாகாண சபைக்கும் வழங்கப்பட வேண்டுமாயினும், வடமத்திய மாகாணத்திற்கான உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினது மொத்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச்சேகரிப்பு எவ்வளவு என்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட தொகை சேகரிக்கப்பட்ட வரியினது 1/3 பங்குக்குச் சமமானதா என்பதையும் உறுதி செய்திருக்க வில்லை.

(ஆ) வியாபாரப் புரள்வு வரியானது 2012 ஜனவரி 01 முதல் அமுலுக்குவரும் பொருட்டு ஒழிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் நிலுவையாக உள்ள வியாபாரப் புரள்வு வரியே சேகரிக்கப்பட வேண்டிய போதும், மாகாண வருவாய் ஆணையாளரின் மீளாய்வாண்டில் ரூபா 6,000,000 வியாபாரப் புரள்வு வரியை வருவாயாகச் சேகரிப்பதற்கான மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,179,420 ஆகவிருந்த சொத்து சுவீகரிப்பிற்கான முத்திரைக் கட்டண வருவாய் நிலுவையில் 42 சதவீத்தைக் குறிக்கும் ரூபா 495,342 மாத்திரமே

மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபா 52,000,000 ஆகும். சேகரித்த நிகர வருவாய் ரூபா 65,377,442 ஆகவிருந்தும் மீளாய்வாண்டின் முடிவில் ரூபா 7,245,680 வருவாய் நிலுவை காணப்பட்டது. இதற்கமைய, மதிப்பீட்டை மேற்கொள்கையில் இனங்காணாதுபோன ரூபா 20,127,580 வருவாயானது ஆண்டின்போது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் வருவாய் மதிப்பீடானது சாத்தியமற்றதும் பிழையற்றது அல்லவென்றும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண வருவாய்த் திணைக்களம் நீதிமன்றத் தண்டப்பண அறவீட்டிற்காக வடமத்திய மாகாணத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு என்சீ-100 மாதிரிப் படிவங்களை வழங்கியபோதும், அப்புத்தகங்களின் மூலம் அறவீடு செய்த தண்டப் பணம் தொடர்பாகப் பரிசீலிக்கப்படாததால் நீதிமன்றங்கள் அனுப்பிவைத்த தண்டப் பணத்தொகை சரியானதா என்பதையிட்டுத் திருப்தியடைய முடியாதிருந்தது. அவ்வாறே, பயன்படுத்திய புத்தகங்களை மீளப் பெறாது மீண்டும் பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தன. நீதிமன்றங்கள் அறவிடும் தண்டப்பணம் திணைக்களத்திற்கு முற்றாக அனுப்பி வைக்கப்படுவதில்லை என்பது மாகாண வருவாய் ஆணையாளரின் பதிலாக அமைந்தது.

(உ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் வரி அறவிடப்பட வேண்டிய காணியின் அளவு மற்றும் அறவிடப்பட வேண்டிய வரித்தொகை தொடர்பான விபரம் என்பன அடங்கிய பதிவேடு பேணப்படாமையால் காணி வரி வருவாயைக் குறிப்பாக மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ஆண்டின் முடிவிலான வரி வருவாய் நிலுவையைக் கணிப்பிடுவதற்கும் இயலாதிருந்தது.

(ஊ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த வருவாய் நிலுவை ரூபா 123,498,097 ஆகும். எனினும், 2013 ஆம் ஆண்டின்போது அதில் 2 சதவீதமான ரூபா 2,726,736 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் வருவாய் நிலுவைச் சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இது 6 சதவீதக் குறைவாகும்.

(எ) ஒவ்வொரு பிரதேச செலயகப் பிரிவுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள மதுபான அனுமதிப் பத்திரதாரர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் சேகரிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண வருவாய், பிரதேச செயலகங்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த வருவாய், அனுப்பி வைக்கப்படாது நிறுத்தி

வைத்த வருவாய், வருடாந்தம் அனுமதிப் பத்திரங்களைப் பெறாது போன அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களைப் பெறக்கூடியவாறான மதுபான அனுமதிப்பத்திரதாரர் பதிவேடு ஒன்றை மாகாண வருவாய்த் திணைக்களம் தயாரித்து, அது நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை.

(ஏ) பதிவு செய்யப்பட்ட வியாபாரங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் பதிவுச் சான்றிதழ்களின் இணைப் பிரதி என்பன ஒவ்வொரு பிரதேச செயலகத்தாலும் மாதாந்தம் வருவாய்க் கணக்களி உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், அவ்வறிக்கைகளதும் சான்றிதழ்களினதும் இணைப்பிரதிகளின் பிரகாரம் பெறப்பட்ட வருவாய் சரிதானா என்பதை உறுதிசெய்யாது வருவாய்க் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 102,194,257 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 729,914,922 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 1,024,578,920 அதிகரித்திருந்தபோதும், நிதிசார் விளைவு ரூபா 627,720,665 முன்னேற்றமடைந்திருந்தது. அரசாங்க மானியத்தின் ரூபா 1,553,563,357 வரி மற்றும் வரி அல்லாத வருவாயின் ரூபா 98,736,228 ஆகிய அதிகரிப்புகளே இதற்கான காரணமாகும்.

## 5. அதிகார சபைக் கணக்கு / நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு

### 5.1 அதிகார சபைக் கணக்கு / நிதியக் கணக்கு

வட மத்திய மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் 6 அதிகார சபைகள் தாபிக்கப்பட்டு 6 நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. விபரம் வருமாறு

### 5.1.1 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 நவெம்பர் 25 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. கணக்காய்வின்போது புலனாகிய முக்கிய அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் சிவில் பொறியியலாளர் (தரம் 3) பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரின் சேவை நிரந்தரம் ஆக்கப்படாது 18 மாதகாலச் சேவைக்கு முன்பே வடமத்திய மாகாண வீதிச் செயற்திட்டக் கடமைகளுக்கு 4 ஆண்டு காலத்திற்கு முற்றாக விடுவிக்கப்பட்டிருந்தார். அதிகாரசபையில் ஆட்சேர்க்கப்பட்ட நாளுக்கு முன்பாக தனியார் மற்றும் அரச துறைகளின் 12 ஆண்டு கால செயற்திட்டச் சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு 8 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2009 ஏப்ரல் 01 தொடக்கம் கணக்காய்வுத் தினம் வரை அவ்வாறாக வழங்கப்பட்ட சம்பள ஏற்றம் ரூபா 309,600 ஆகும். அத்துடன் , அச்சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு வரிச் சலுகையுடனான வாகன அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குவதற்குச் சிபார்சு செய்ததன் மூலமும் அரசிற்கு இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபை பிரசித்த விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்களைக் கோரியதன் பின்னர் வெற்றிடங்களுடைய பதவிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக, பதவி வெற்றிடம் இல்லாத நிலையில் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 57 தொழிலாளர்களை 2008 -2013 காலப்பகுதியின்போது ஆட்சேர்ந்திருந்ததுடன் அத் தொழிலாளர்களுக்கு 2011 ஜனவரி முதல் 2013 டிசெம்பர் வரையான காலப்பகுதிக்கு சம்பளமும் படியுமாகக் கொடுப்பனவு செய்திருந்த தொகை ரூபா 10,180,882 ஆகும். அத் தொழிலாளர்களில் 8 பேர் முதலமைச்சரது கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(இ) தேவையான தகைமைகளைக் கொண்டிராத அதிகாரசபையின் பெண் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதியன்று சிவில் பொறியலாளர் (தரம் 4) ஆக நியமிக்கப்பட்டிருந்தார். அந்நாள் தொடக்கம் 2013 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு பதவியுயர்வுக்குரிய சம்பளமும் படியுமாக அப் பெண் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ரூபா 788,112 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 5.1.2 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண வேலை மற்றும் இயந்திர சாதன முகவர் நிலையம்

முகவர் நிலையத்துடன் தொடர்புடைய மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் முகவர் நிலையத்தால் மீளாய்வாண்டின்போது டயர் சேவைப் பிரிவின் ரூபா 1,878,286 வருவாய் மீதான பெறுமதி சேர் வரியாக ரூபா 201,244 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க மற்றும் 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அந் நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய உதவு தொகையைக் குறித்த நாட்களில் செலுத்தாமையால் முகவர் நிலையமானது ரூபா 254,246 தண்டப் பணத்தைச் செலுத்த வேண்டியதாயிற்று.

(இ) 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி அதிகாரச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் முகவர் நிலையமானது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 220,809 ஐச் செலுத்தாததால் நிறுவனத்திற்கெதிராக ரூபா 40,390 தண்டப் பணம் விதிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முகவர் நிலையத்தினால் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட டோசர் உதிரிப் பாகங்கள் அடங்கலாக 75,000 கிலோ கிராம் இரும்பை விற்பனை செய்வதற்கு 2013 பெப்ரவரி 08 ஆந் திகதியன்று புதினப் பத்திரிகைகளில் விளம்பரங்கள்

பிரசுரிக்கப்பட்டிருந்தன. 50782 கிலோ கிராமை ரூபா 3,230,720 க்கு விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு பின்னர் அத்தீர்மானமானது போதிய விளக்கமளிக்கப்படாது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்கையிருப்பானது 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய கேள்விச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,070,191 நிதியிழப்புடன் ரூபா 2,160,229 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. பயன்படுத்தப்படாது அகற்றி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,516,047 பெறுமதியான எஞ்சிய டோசர் உதிரிப் பாகங்கள் அடங்கலான 24218 கிலோ கிறாம் இரும்பு தொலைந்து போனது.

### 5.1.3 வடமத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

அதிகார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்படாததுடன் அதிகார சபையால் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த பல்வேறு உபகரணங்களது பெறுமதியில் 2013 ஜூன் 10 வரை ரூபா 3,547,462 அவ்வுபகரணங்களைப் பெற்றுக்கொண்ட நலன்பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. அத் தினத்தில் உள்ளவாறு அதில் ரூபா 1,535,885 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அறவிடப்பட வேண்டிய எஞ்சிய ரூபா 2,011,577 அறவிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 5.1.4 வட மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

அதிகார சபையுடன் தொடர்புடைய மீளாய்வாண்டினது நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறான 2008 ஜூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் அதிகார சபையின் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் உரித்தான மாதாந்த எரிபொருள் வரம்பாகிய 140 லீட்டருக்கு அதிகமாக 170 லீட்டர் வீதம் வழங்கப்பட்டு, ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 58,248 வீதம் மீளாய்வாண்டின்போது அதிகமாக வழங்கப்பட்டிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 116,496 ஆகும். அவ்வாறே, அந்த எரிபொருளுக்குப் புறம்பாக அதிகார சபையின் தலைவரும் பொது முகாமையாளரும் தலைமைச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரமின்றி

வெளிக்கடமைகளுக்காகப் பெற்றிருந்த எரிபொருள் தொடர்பாக 8 சந்தர்ப்பங்களிலும் ரூபா 116,159 மற்றும் ரூபா 63,191 எனக் கூட்டுத் தொகையாகப் பெற்றிருந்தனர்.

(ஆ) வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை 10 பஸ்வண்டிப் பரிசோதகர்களை நியமித்திருந்தபோதும், அந்த உத்தியோகத்தர்களுக்குப் புறம்பாக அதிகார சபையின் நிர்வாக உத்தியோகத்தர் அவரது நாளாந்த கடமைகளுக்குப் புறம்பாக மீளாய்வாண்டின் முதல் 5 மாதங்களின்போது மாத்திரம் 69 வேலை நாட்களின்போது பஸ்வண்டிகளையும் பஸ் தரிப்பிடங்களையும் பரிசோதிப்பதில் ஈடுபட்டு அதற்கான மொத்த சீவனப் படியாக ரூபா 27,600 ஐப் பெற்றிருந்தார்.

### 5.1.5 வடமத்திய மாகாண சுற்றாடல் அதிகாரசபை

2012 ஜனவரியில் தாபிக்கப்பட்ட இந்த அதிகார சபைக்குரிய மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.1.6 வடமத்திய மகாண அவசரகால நிதியம்

நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியம் ஆரம்பமாகிய 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் எவையும் நடைபெறாததுடன் நிதியத்தைத் தாபிப்பதற்கான சட்டவாக்கத்தின் மூலம் நிதியேற்பாடு வழங்கப்படாது இருந்தும் அந்நிதியமானது அதன் வட்டி வருவாயை முதலமைச்சரின் நிதியத்திற்கு மாற்றஞ் செய்திருந்தது.

(ஆ) நிதியம் ஆரம்பமாகி 23 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், சட்டவாக்கம் 20 (3) க்கமைய நிதியத்தைச் செயற்படுத்தவதற்கும் தேவையான விதிகளை ஆளுநர் தயாரித்திருக்கவில்லை.

### 5.1.7 வடமத்திய மாகாண முதலமைச்சர் நிதியம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியம் கொண்டிருந்த தொகை ரூபா 5,185,974 ஆகும்.

### 5.1.8 வடமத்திமாகாண ஊக்குவிப்பு நிதியம்

மீளாய்வாண்டின்போது இந்நிதியத்தில் போதியளவு கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறவில்லை.

### 5.1.9 வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி நிதியம்

2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஜனவரியில் ஆரம்பாகிய இந்நிதியத்தின் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை ரூபா 2,047,235 ஆகும். எனினும், அந்நிதியத்தின் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டியுள்ளமை பற்றியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அவை கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் சட்டவாக்கத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை. எவ்வாறாயினும், சட்டவாக்கத்தின் 26(2) பிரிவின் பிரகாரம் இந்நிதியம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்குட்பட வேண்டுமெனத் தெரிவுக்கப்பட்டுள்ளதால் நிதியத்தின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாக நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், நிதியம் ஆரம்பமாகிய ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையிலான நிதியத்தின் நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன.

### 5.1.10 வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியம்

2005 ஜனவரியில் ஆரம்பமாகி செயற்பட்டவாறிருந்த இந் நிதியத்தின் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை ரூபா 8,331,893 ஆகும். இந்நிதியத்தினது ஆரம்ப ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன.

### 5.1.11 வடமத்திய மாகாண சிறுவர் பாதுகாப்புச் சேவை நிதியம்

2008 ஜனவரியில் ஆரம்பமாகி செயற்பட்டவாறிருந்த இந்நிதியத்தின் மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை ரூபா 2,021,552 ஆகும். இந்நிதியத்தின் ஆரம்ப ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதிக்குரிய 6 நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. நிதியத்தின் நோக்கத்திற்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பெஹெசர எனும் புதினப் பத்திரிகையை அச்சிடுவதற்கு 2012,2013 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்திலிருந்து ரூபா 158,000 செலவிடப்பட்டிருந்தது.

### 5.2 வணிக முற்பணக் கணக்கு

### 5.2.1 சுயவேலைவாய்ப்புச் சுழற்சிக் கடன் முற்பணக் கணக்கு

முற்பணக் கணக்குடன் தொடர்புடைய மீளாய்வாண்டினது நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை இம் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கு மாகாண சபையால் நிதி ஏற்பாடு செய்யப்பட்டபோதும், அம்முற்பணக் கணக்கின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை ஈடேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) 2011,2012 ஆம் ஆண்டுகளுக்கான நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.2.2 தார் கொள்வனவிற்கான முற்பணக் கணக்கு

முற்பணக் கணக்கு நடவடிக்கைக்குரிய மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 நவெம்பர் 25 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.2.3 புடவைக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான முற்பணக் கணக்கு

முற்பணக் கணக்கு தொடர்பான மீளாய்வாண்டினது நிதிசார் கூற்றுக்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை விட்டு விலகிய மற்றும் உயர் கல்வி வாய்ப்புப் பெறாத வேலையற்ற யுவதிகளின் சீவனோபாய மார்க்கமாக கைத்தறிப் புடவைக் கைத்தொழிலில் புதிய தொழில்நுட்ப முறைமைகளினுாடாகப் பயிற்சி வழங்குவதே புடவைக் கைத்தொழில் முற்பணக் கணக்கின் நோக்கமாகும். எனினும், மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான 43 புடவைக் கைத்தொழிலில் ஏறக்குறைய 65 சதவீத எண்ணிக்கையிலான மொத்தக் கைத்தொழிலாளர்களில் ஏறக்குறைய 60 சதவீதத்தினர் 35-65 வயதுக்கு இடைப்பட்டோர் ஆவர். அவர்களது மாத வருவாய் சராசரியாக ரூபா 2,500 முதல் 6,000 வரையானதாகும்.

(ஆ) 2013 வருடாந்த மதிப்பீட்டில் புடவைக் கைத்தொழிலுக்கென 642-51-4 செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 35,187,000 ஆகும். இதில் ரூபா 33,588,365 செலவாகியிருந்தும், மீளாய்வாண்டின்போது புடவைக் கைத்தொழில் வணிகக் கணக்கில் ரூபா 1,667,341 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் திரண்ட தொழிற்படு நட்டம் ரூபா 7,708,106 ஆகவுமிருந்தது.

### 5.2.4 விலங்கின அபிவிருத்தி முற்பணக் கணக்கு

திரப்பனே விலங்கினப் பண்ணையில் மீளாய்வாண்டில் உள்ள 33,325 கோழிக் குஞ்சுகளில் ஆண்டின்போது 28,903 குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டும் இறந்து போயிருந்தன. எஞ்சியிருக்க வேண்டிய குஞ்சுகள் 4,422 ஆகியபோதும், கையிருப்புப் பதிவேட்டில் 675 ஆகக் காட்டப்பட்டிருந்தரோடு ரூபா 430,905 பெறுமதியான 3,747 குஞ்சுகளின் வேறுபாட்டிற்கான விளக்கமளிக்கப்படவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

6.1.1 மீளாய்வாண்டின்போது மாகாண சபைக்குக் கிடைக்கப்பெற்ற அபிவிருத்தி மானியத்தைப் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட, அமுலாக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| | குறித்த நோக்குடனான மானியம் | | மாகாண குறித்த சொத்துக்குரிய மானியம் | | உலக வங்கி உதவி | ஏனைய மூலதனச் சொத்து மானியம் | ஒருங்கு சேர்ந்த மானியம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | புதிய | தொடரும் | புதிய | தொடரும் | புதிய | தொடரும் | புதிய | தொடரும் |
| அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 421 | 45 | 379 | 483 | 42 | 479 | 45 | 15 |
| அமுலாக்கிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 393 | 44 | 359 | 483 | 37 | 450 | 45 | 15 |
| ஆண்டின் போது நிறைவேறிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 342 | 42 | 232 | 465 | 8 | 425 | 26 | 15 |
| அங்கீகரித்த செலவினம் (ரூபா) | 587,274 | 39,883 | 492,013 | 401,233 | 274,397 | 161,432 | 69,938 | 5,062 |
| ஆண்டின் போதான செலவினம் (ரூபா 000) | 308,381 | 31,620 | 231,440 | 312,472 | 147,916 | 100,112 | 54,258 | 4,650 |

பின்வருவன அவதானிக்ககப்பட்டன.

(அ) குறித்த நோக்குடனான மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட புதிய 421 அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 393 அமுலாகி அதற்காக ரூபா 308,380,692 பயன்படுத்தப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின்போது 342 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேறியிருந்தன. அவ்வாறே, மீளாய்வாண்டில் தொடரப்பட்டவாறிருந்த ரூபா 39,882,604 பெறுமதியான 45 செயற்திட்டங்களில் 44 அமுலாகி அதற்காக ரூபா 31,620,406 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 42 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிறைவேறியுமிருந்தன.

(ஆ) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 492,012,802 க்கான 379 அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 359 அமுலாகி அதற்காக ரூபா 231,439,935 பயன்படுத்தப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், 232 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மாத்திரமே ஆண்டின்போது நிறைவேறியிருந்தன. அவ்வாறே, மீளாய்வாண்டில் தொடரப்பட்டவாறிருந்த ரூபா 401,232,686 மதிப்பிடப்பட்ட சகல 483 அபிவிருத்திச் செயற்திட்டங்களும் அமுலாகி அதற்காக ரூபா 312,471,673 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 465 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேறியுமிருந்தன.

(இ) உலக வங்கி உதவியுடனான அங்கீகரிக்கப்பட்ட ரூபா 274,397,000 க்கான 42 புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 37 அமுலாகி அதற்காக ரூபா 147,915,880 பயன்படுத்தப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின்போது 08 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேறியிருந்தன.

(ஈ) ஒருங்கு சேர்ந்த மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 69,937,933 க்கான 45 புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களும் அமுலாகி அதற்காக ரூபா 54,257,914 செலவிடப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின்போது 26 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேறியிருந்தன. ரூபா 5,062,067 க்கானதும் மீளாய்வாண்டில் தொடரப்பட்டவாறிருந்ததுமான 15 செயற்திட்டங்களும் அமுலாகி அதற்காக ரூபா 4,649,648 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டங்கள் யாவுமே நிறைவேறியும் இருந்தன.

(உ) ஏனைய மூலதனச் சொத்து மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 161,432,121 க்கான 479 புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 450 அமுலாகி

அதற்காக ரூபா 100,112,234 பயன்படுத்தப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின்போது 425 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேறியிருந்தன.

6.1.2 2013 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் கல்விக்காக மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் என்பன மொத்தமாகச் செலவிட்ட தொகை ரூபா 5,974,506,000 ஆகும். முன்னைய ஆண்டில் அச்செலவினம் ரூபா 5,459,995,880 ஆகவிருந்தது. மீளாய்வாண்டில் வடமத்திய மாகாணத்தின் பரீட்சைப் பெறுபேறுகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த(உயர் தரம்) ஆகியவற்றில் சித்தியடைந்த சதவீதம் முறையே 10, 63, 55 என்பனவாகும். முன்னைய ஆண்டில் அச்சதவீதம் முறையே 15, 58.6, 57.58 எனவிருந்தது. மீளாய்வாண்டில் க.பொ.த (சாதரண தர) பெறுறேுகளில் நூற்றுக்கு 4.4 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்ட போதும், 5 ஆம் அண்டு புலமைப் பரிசில் மற்றும் க.பொ.த (உயர்தரம்) என்பவற்றினது பெறுபேறுகளில் முறையே 5 சதவீத, 2.58 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

6.1.3 மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 1,657,998,094 க்கான 1354 புதிய மற்றும் தொடர்ந்தவாறிருந்த வேலை முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையினது முன்னேற்ற அறிக்கைப் பிரகாரம் அவற்றின் அமுலாக்கலும் நிறைவேறலும் தொடர்பான முன்னேற்றம் கீழே காணப்படுகின்றது.

| | **புதிய வேலைகள்** | **தொடர்ந்தவாறிருந்த வேலைகள்** | **வேலை முன்மொழிவின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| முற்றாக நிறைவேறியன | 472 | 546 | 918 |
| 75% -90% நிறைவேறியன | 123 | 18 | 141 |
| 50%- 75% நிறைவேறியன | 150 | 03 | 153 |
| 50 சதவீதத்திற்கும் குறைவாக நிறைவேறியன | 122 | 02 | 124 |
| ஆரம்பிக்கப்படாதன | 08 | 10 | 18 |
| | 875 | 579 | 1354 |

பின்வருவனவும் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 759,396,232 பெறுமதியான 875 புதிய வேலை முன்மொழிதல்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதில் முற்றாக நிறைவேறியவை 472 வேலைகள் மாத்திரமே. 123 வேலைகள் 75 முதல் 90 சதவீதத்துக்கான நிறைவை அடைந்திருந்தன. 150 வேலைகள் 50 முதல் 75 சதவீத நிறைவை அடைந்திருந்தன. 122 வேலைகள் 50 சதவீதத்துக்கும் குறைவாக நிறைவடைந்து 8 வேலைகள் ஆரம்பிக்கப்படாதுமிருந்தன.

(ஆ) மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூபா 898,601,862 பெறுமதியான 579 தொடர் வேலைகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் 546 வேலைகள் முடிவடைந்தும் 10 வேலைகள் ஆரம்பிக்கப்படாதுமிருந்தன. 18 வேலைகள் 75 முதல் 90 சதவீத நிறைவை எய்தியிருந்தன. 3 வேலைகள் 50 முதல் 75 சதவீதமான நிறைவையடைந்து 2 வேலைகள் 50 சதவீதத்துக்கும் குறைவான நிறைவை எய்தியிருந்தன.

6.1.4 மாகாண கமத்தொழில் திணைக்களத்தால் மீளாய்வாண்டில் ரூபா 19,882,419 க்கான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியமானது அனுராதபுரம் மற்றும் பெலன்னறுவை ஆகிய 2 மாவட்டங்களுக்கிடையே சரியான அடிப்படையில் விநியோகிக்கப்படாமை பின்வரும் குறிப்பின் மூலம் அவதானிக்கப்பட்டது.

| | **அனுராதபுரம்** | **பொலன்னறுவை** |
|---|---|---|
| விவசாயக் குடும்ப எண்ணிக்கை | 123,264 | 59,953 |
| க.ஆ.உ.க. பிரிவு | 426 | 187 |
| நிதியேற்பாடு (ரூபா) | 7,398,919 | 12,488,500 |
| நிதியேற்பாட்டின் சதவீதம் | 37 | 63 |

## 6.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையினது 24 நிறுவனங்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதியினது கூட்டுத்தொகை ரூபா 369,250,928 ஆகும். இம் மீதியில் உள்ளடங்கிய காலங்கடந்த வைப்பாகிய ரூபா 241,703,087 சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வடமத்திய மாகாண நிதிசார் விதி 369 இன் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2 விடயங்களது அதி உயர் செலவின மீதியினது வரம்பு ரூபா 1,603,328 மற்றும் ஒரு கணக்கீட்டு விடயத்தினது செலவினத்திற்குரிய அதி உயர் வரம்பு ரூபா 32,262 என அதிகரிப்புக்குள்ளாகின. 10 கணக்கீட்டு விடயங்களது அதி குறைந்த பெறுவனவு வரம்பு ரூபா 4,114,847 வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) வடமத்திய மாகாண சபைக்குரிய 10 வைத்தியசாலைகளில் இருந்த ரூபா 3,293,249 க்கான காலங்கடந்ததும் குறைந்த தரத்திலானதுமான 93080 கூறு ஔடதங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மாகாண சபை நிறுவனங்களில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த ஊழியர் கடன் முற்பண மீதி ரூபா 743,814,932 ஆகும். இதில் 21 நிறுவனங்களது ஓராண்டைக் கடந்தும் அறவீடு நிலுவையாக இருந்த மீதி ரூபா 120,919,365 ஆகும்.

(உ) 2007-2009 காலப்பகுதியின்போது மாகாண கல்வி அலுவலகத்திலும் கெபிதிகொல்லேவ மற்றும் தம்புத்தேகம கல்வி அலுவலகங்களிலும் உத்தியோகத்தர்களது சம்பளத்தில் கழித்துக்கொள்ளப்பட்ட விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய உதவு தொகையான ரூபா 34,280,819, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களம் விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டில் வரையப்பட்ட ரூபா 1.041,000 க்கான 155 காசோலைகளும் 2013 ஆம் ஆண்டில் வரையப்பட்ட ரூபா 924,918 க்கான 112 காசோலைகளும் என ரூபா 1,965,918 க்கான 267 காசோலைகள் 2014 மே 20 வரை கையிலிருந்தன.

## 6.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுறவு, வர்த்தக, மற்றும் உணவு, சிறு கைத்தொழில், புடவைக் கைத்தொழில், கிராம அபிவிருத்தி மற்றும் சுற்றுலா அமைச்சு என்பன நலன்பெறுநர்களுக்கு வழங்குவதற்கென டிசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்திருந்த ரூபா 4,464,674 க்கான 117 மிதி வண்டிகள், 113 பழக் கூடைகள் 277 மாற்றீடு அடுப்புகள் என்பன 2014 ஜீன் 17 ஆந் திகதியளவிலும் நலன்பெறுநர்களுக்கு வழங்கப்படாதிருந்தன.

(ஆ) வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண வேலை மற்றும் இயந்திர சாதன முகவர் நிலையத்திடம் சகல வசதிகளுடனும் கூடிய பிரசுராலயம் ஒன்றும் இரும்பை ஒட்டுவதற்கான உபகரணங்களுடனான இயந்திர சாதன தொழிற்சாலை ஒன்றும் இருக்கையில், பிரதான அமைச்சும் மாகாண கலாசாரத் திணைக்களமும் மீளாய்வாண்டின்போது அச்சிடும் நடவடிக்கைகளுக்கு ரூபா 3,689,625, நூற்றுப் பத்துக் கொடிக் கம்பங்களை நிர்மாணிப்பதற்காக பிரதான அமைச்சால் ரூபா 630,850 என தனியார் துறை வழங்குநர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் மூலம் மாகாண சபை நிதியத்தை மாகாண சபை நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதைத் தவிர்த்து மாகாண சபையின் வளமானது குறைவான பயன்பாட்டிற்குள்ளாகியிருந்தது.

(இ) பிரதான அமைச்சினால் வட மத்திய மாகாண விவசாயிகளுக்கிடையே மீளாய்வாண்டின்போது விநியோகிக்கப்பட்ட 5 வகையான 4800 பழச் செடிகள் வட மத்திய மாகாண கமத்தொழில் அமைச்சின் நாற்றுப் பண்ணைகளிலிருந்து ரூபா 282,000 க்குக் கொள்வனவு செய்யப்படக்கூடியனவாகும். எனினும், செடிகளை தனியார் துறையைச் சேர்ந்த நாற்றுப் பண்ணைகளிலிருந்து ரூபா 429,000 க்குக் கொள்வனவு செய்தமையால் மாகாண சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 147,000 ஆகும். மாகாண சபைக்குரிய நிதியம் மாகாண சபை நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது தவிர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) தம்புத்தேகம ஆரம்ப வைத்தியசாலையில் இருந்த ரூபா 301,773 க்கான காலங் கடந்த ஔடதங்களும் சத்திர சிகிச்சைப் பொருட்களும் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தன.

(உ) திம்புலாகல மற்றும் பொலன்னறுவை கல்வி வலயத்தில் உள்ள 172 பாடசாலைகளுக்கு 1078 ஏக்கர், 4 றூட் 23 பர்ச்சஸ் காணியினது உரித்தை

உறுதி செய்வதற்கான உரித்துறுதியோ அல்லது உரித்துச் சான்றிதழோ மாகாண கல்வித் திணைக்களத்திடம் இருக்கவில்லை.

**6.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,005,387 ஊக்குவிப்புப் படியாக திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந்த உத்தியோகத்தர்கள் காணி வரிச் சேகரிப்பில் நேரடியாக ஈடுபட்டமைக்கோ அல்லது கள விஜயங்களை மேற்கொண்டு வரியை அறவிட்டதற்கோ சான்றுகள் இருக்கவில்லை. அவ்வாறே ஊக்குவிப்புப் படிக்கொடுப்பனவிற்கோ அல்லது ஊக்குவிப்புப் படித் திட்டத்திற்கோ மாகாண ஆளுநரிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெற்றதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப பகுப்பாய்வுக்குழுவினது அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவைப் பொருட் கொள்வனவுக் குழுவினால் ஒவ்வொன்றும் ரூபா 61,810 வீதம் பெறுமதி சேர் வரியற்ற விலையில் 3,750 நீர்ப் பம்புகள் ரூபா 231,787,500 க்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கு மேற்கொண்ட தீர்மானமானது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நீர்ப்பம்புகளுக்குப் புறம்பாக அவற்றினது மேலதிக உபகரணத் தொகுதிகள் 3,750 பெறுமதி சேர் வரியுடன் ஒவ்வொன்றும் ரூபா 5,252.80 க்கு அமைச்சரவைத் தீர்மானத்தை மீறும் விதத்தில் பிரதான அமைச்சினது முகாமைத்துவத்தால் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 19,698,000 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் நிறுவனத்தை வந்தடைந்து கையிருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டதன் பின்னரே கொடுப்பனவை மேற்கொள்ளலாமெனினும், 2012 டிசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட துணைப்பாகங்களுடனான நீர்ப்பம்புகளில் ரூபா 93,100,000 பெறுமதியான 1250 நீர்ப்பம்புகள் 2014 ஆம் ஆண்டிலும் வழங்குநரது தம்புத்தேகம மற்றும் அனுராதபுரம் களஞ்சியங்களில் இருந்தன.

(இ) மாகாண சபை முதலமைச்சரதும் மாகாண சபை அமைச்சர்களதும் படி மற்றும் அவர்களது தனிப்பட்ட பதவியணியினருக்கான படி என்பவற்றிற்கு ஒவ்வொரு அமைச்சினதும் செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதியில் மொத்தப் படியும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மாகாண சபை மற்றும் மாகாண சபைச் செயலாளர் அலுவலக செலவினத் தலைப்பிலிருந்து 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,661,450 சாரதிகளுக்கும் ஏனைய தனிப்பட்ட பதவியணியினருக்கும் படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2007 நவெம்பர் 19 ஆந் திகதிய CSA/PI/40 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தால் 2006 ஜனவரி 4 ஆந் திகதிய மற்றும் 2006 ஒக்டோபர் 23 ஆந் திகதிய சம இலக்கமுடைய அதிமேதகு சனாதிபதியின் சுற்றறிக்கைக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகன மற்றும் எரிபொருள் வரம்புகளை மீறி முதலமைச்சருக்கும் அவரது இரு தனிப்பட்ட பதவியணியினருக்கும் மீளாய்வாண்டின்போது 4 வாகனங்களும் ரூபா 7,615,271 க்கான எரிபொருளும் பிரதான அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது.

| பதவி | வழங்கப்படக் கூடிய வாகன எண்ணிக்கை | வழங்கிய வாகன எண்ணிக்கை | வரம்புக்கு அதிகமாக வழங்கப்பட்ட வாகன எண்ணிக்கை | வழங்கப்படக் கூடிய எரிபொருளின் அளவு | வழங்கப்படக் கூடிய எரிபொருள் அளவினது பெறுமதி | வழங்கிய எரிபொருளின் பெறுமதி | வரம்புக்கு அதிகமாக வழங்கிய எரிபொருளின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| முதலமைச்சர் | 03 | 06 | 03 | 7200 (P)<br>12000(D) | 2,624,160 | 7,317,471 | 4,693,331 |
| பிரத்தியேக செயலாளர் | 01 | 01 | - | 2880 (D) | 465,264 | 2,176,024 | 1,710,760 |
| ஊடகச் செயலாளர் | 01 | 02 | 01 | 2612 (D) | 317,316 | 1,528,496 | 1,211,180 |
| | | | | | | | 7,615,271 |

(உ) 2007 நவம்பர் 19 ஆந் திகதிய (CSA/P1/40) ஆம் இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஜனவரி 04 ஆந் திகதிய சம இலக்கமுடைய அதிமேதகு சனாதிபதியின் சுற்றறிக்கைச் கடிதத்தின் 1.1 பந்திக்கமைய, மாண்புமிகு முதலமைச்சரது தனிப்பட்ட பதவியணி 15 க்கு உட்பட வேண்டுமாயினும், அவ்வரம்பு 30 ஆல் அதிகரிக்கும் விதத்தில் 45 பேர் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். வரம்பை மீறி பணியிலமர்த்தப்பட்ட 30 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின்போது சம்பளம், படி, பயணச் செலவினமாக ரூபா 8,652,550 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) கொள்வனவு வழிகாட்டியைக் கவனத்திற் கொள்ளாது தெரிவு செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையில் ஈடுபட்டிராத பாதுகாப்புச் சேவை வழங்குநர் ஒருவர் பிரதான அமைச்சின் சில கட்டிடங்கள் மற்றும் நலன்பெறுநர்களுக்கு விநியோகிக்கப்படாதிருந்த எஞ்சிய பொருட்களது பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். மீளாய்வாண்டின்போது அவ்வழங்குநர் ரூபா 2,243,968 க்கான விலைப்பட்டியலைச் சமர்ப்பித்து இருந்தார். கணக்காய்வுத் தினமன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,486,240 ஆகும். அவ்விலைப்பட்டியலில் வட மத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண வேலை மற்றும் இயந்திர சாதன முகவர் நிலையக் காணியில் உள்ள களஞ்சியப் பொருட்களை 2013 ஜனவரி முதல் மே வரை பாதுகாத்தமைக்கான ரூபா 504,560 விலைப்பட்டியலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அக்காலப்பகுதியின்போது அபிவிருத்தி நிர்மாண வேலை மற்றும் இயந்திர சாதன முகவர் நிலைய சேவை வழங்கப்படவில்லை. என உறுதி செய்யப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் பாதுகாப்புச் சேவை மேற்பார்வை செய்யப்படாது வழங்குனர் சமர்ப்பித்த வரவு இடாப்பை மாத்திரம் வரவுக்கான உறுதியாகப் பெற்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6.5 குறைபாடுகளாகத் தோற்றுவன

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் அமுலாக்கப்படும் லியசவிய மற்றும் திரசார கிராமிய நிகழச்சித்திட்டத்திற்கு முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 8.493,816 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில்

செலவாகிய ரூபா 6,396,462 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 22 க்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் 19 க்கும் ரூபா 50,000 வீதம் சுழற்சிக் கடன் வழங்கியமையால் ஏற்பட்ட செலவினமாகும்.

(ஆ) கெபிதிகொல்லாவே கல்விப் பிரிவில் உள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களது பதவியணியினரது சம்பளத் தயாரிப்பு கெபிதிகொல்லேவ வலயக்கல்வி அலுவலகத்தின் நிரந்தர சிற்றூழியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் 2012 செப்டெம்பர் முதல் 2013 பெப்ரவரி வரையான 6 மாத காலத்தின் போது போலியான தகவல்களைக் கணணியில் பதித்து போலியான பெயர் ஒன்றில் வங்கிக் கணக்கில் செலவு வைத்த தொகை ரூபா 410,629 ஆகும்.

(இ) 2007 ஜுலை முதல் 2013 நவம்பர் வரை சமுர்த்தி அதிகார சபையிடமிருந்து சம்பளமும் படியுமாக ரூபா 2.639,765 ஐப் பெற்றிருந்த சமுர்த்தி அதிகார சபையில் பணியாற்றிய கெபிதிகொல்லாவே கல்வி வலய ஆசிரியர் ஒருவர் அக்காலப்பகுதியில் கெபிதிகொல்லாவே வலயக் கல்வி அலுவலகத்திலிருந்தும் ரூபா 2.488,032 சம்பளமும் படியுமாகப் பெற்றிருந்தார்.

(ஈ) மாகாண கமத்தொழில் அமைச்சு 2013 டிசெம்பரில் பம்பரகெலெ நன்னீர் அபிவிருத்தி நிலையத்தில் 60 கடற்றொழில் சங்க அங்கத்தவர்களுக்கு நடாத்திய கடல் நீரினப்பெருக்க முகாமைத்துவம் தொடர்பான களக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் அமைச்சரின் பதவியணியினைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அடங்கலாக 75 பேர் பங்கு பற்றியிருந்தனர். அவ்வுத்தியோகத்தர்களுக்குத் தங்குமிட வசதி மற்றும் சகல உணவுகள் பாணங்கள் என்பவற்றை வழங்குவதற்கு ஒருவருக்கு ரூபா 2,800 வீதப்படி ஹோட்டல் ஒன்றிற்கு ரூபா 210,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் பெற்றுக்கொண்ட முற்பணத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டதாகப் போலி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 26,920 பெறப்பட்டிருந்தது.

(உ) 2013 ஜுன் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியின்போது பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக ஊழியர்களது சம்பளத்தில் கழித்துக்கொள்ளப்பட்ட ரூபா 400,000 க்கு மேற்பட்ட தொகையை மோசடியாகத் தனது மற்றும் தனது பிள்ளைகளின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றஞ் செய்திருந்த பெண் முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து

இடைநிறுத்தப்பட்டிருந்தார். இது தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் விசாரணைத் திணைக்களத்திற்கு 2013 டிசெம்பர் 24 அன்று அறிவித்திருந்தபோதும், 2014 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவிலும் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 6.6 குறைவான நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டின்போது மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள மூலதன செலவின விடயங்கள் இரண்டின் கீழான ரூபா 72,900,000 கூட்டுத்தொகையுடைய நிகர நிதியேற்பாட்டின் 72 சதவீதமாகிய ரூபா 52,997,589 மற்றும் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் 3 மூலதன செலவின விடயங்களின் கீழான ரூபா 9,000.000 நிகர நிதியேற்பாட்டின் 63 சதவீதமாகிய ரூபா 5,715,451 என்பன பயன்படுத்தப்படாதிருந்தன.

### 6.7 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுமிருப்பது கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்தின் தன்மை | எண்ணிக்கை / சதுர அளவு | பெறுமதி<br>ரூபா |
|---|---|---|---|
| (i) | காணி | 110 ஏக்கர் | மதிப்பிடப்படவில்லை |
| (ii) | கட்டிடங்கள் | 406 | 17,954,028 (4 கட்டிடங்கள்) |
| (iii) | வாகனங்கள் | 44 | மதிப்பிடப்படவில்லை |
| (iv) | இயந்திரசாதனம் | 01 | மதிப்பிடப்படவில்லை |
| (v) | அலுவலக உபகரணங்கள் | 61 | 368,789 (ஒன்று) |
| (vi) | ஏனையவை | 80 1/2 | 547,255 (நான்கு) |

பின்வருவனவும் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் திணைக்களத்தால் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 4,771,517 செலவில் புதிதாக நிர்மாணித்த மடாடுகம சிறுவர் தங்குமிட நிலையம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2010,2011 ஆம் ஆண்டுகளில் அது ரூபா 2,616,183 செலவில் பழுதுபார்க்கப்பட்டுமிருந்தது. அவ்வாறே, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் அந்நிலைய வளாகத்தில் ரூபா 2,526,923 செலவில் உத்தியோகபூர்வ விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 9,914,623 க்கான அக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட நாட் தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) வட மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குக் சொந்தமான 30 வாகனங்கள் ஏறக்குறைய 5 ஆண்டுகளாகவும் மாகாண பொறியியல் திணைக்களத்தின் 2 வாகனங்கள் மீளாய்வாண்டு ஆரம்பந் தொட்டும் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது நிறுவன வளாகத்தில் துருப்பிடித்தவாறிருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டில் முறைசாரக் கல்விக்கென ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 354,781 மாகாண கல்வித் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் 2007 தொடக்கமாகவும் 2013 ஆகஸ்ட்டில் தம்புத்தேகம, கெக்கிராவ, கெபிதிகொல்லேவ வலயங்களின் முறைசாராக் கல்விக்கென வழங்கப்பட்ட ரூபா 660,900 க்கான 14 தையல் இயந்திரங்களும் அவை வழங்கப்பட்ட மாதத்திலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) பிரதம அமைச்சினால் 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி வெளியிடப்படாத பேக்கரி உபகரணத் தொகுதியும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,296,800 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 145 சூரிய விளக்குகளும் (solar Lantersns) கல்வி அமைச்சின் களஞ்சியம் ஒன்றிலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 12,214,832 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 1142 நீர் வடிகளும் 2011 ஆம் ஆண்டில் ரூபா 706,251 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 1183 பிளாஸ்டிக் கூடைகள் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர சாதன முகவர் நிலையக் களஞ்சியம் ஒன்றிலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 64,946,560 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 872 நீர்ப்பம்புகளும் வழங்குனரின் களஞ்சியத்தில் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி பயனற்றிருந்தன.

(உ) அநுராதபுரம் மாவட்டத்தின் 541 பாடசாலைகள் மற்றும் திம்புலாகல, பொலன்னறுவை கல்வி வலயங்களின் 93 பாடசாலைகள் என்பவற்றின் வங்கிக் கணக்குகளில் 2013

டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடசாலைகளது தரப்பயன்பாட்டிற்கான தொகையாகிய ரூபா 44,773,631 பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஊ) மாகாண சபையின் 3 நிறுவனங்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்த 9 நடைமுறைக் கணக்குகளில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,214,517 பயன்படுத்தப்படாதிருந்தது.

## 6.8 வருடாந்த பொருட் கணிப்பை நடாத்துதல்

மாகாண சபையின் நிதிசார் விதி 476.1 க்கமைய மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக 16 நிறுவனங்களதும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக 4 நிறுவனங்களதும் முறையே மீளாய்வாண்டிற்கான முன்னைய ஆண்டிற்கான பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

## 6.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின்போது மாகாண விவசாய திணைக்களத்தால் 110 லீட்டர் கழிவுப் பொதிகள் 253 கொள்வனவு செய்யப்படுவதறக்கான கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. அதன்போது 100 லீட்டர் கழிவுப் பொதியொன்றினை ரூபா 1,630 வீதம் வழங்குவதற்கு வழங்குனர் ஒருவர் முன்வந்திருந்தார். 10 லீட்டர் சுற்றோட்டம் குறைவாக உள்ளமையால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்னர் மூடி இல்லாத 6 மாத கால உத்தரவாதத்துடன் கூடிய 110 லீட்டர் கழிவுப் பொதிகள் ஒவ்வொன்றும் ரூபா 5,250 வீதப்படி 253 கழிவுப் பொதிகள் ரூபா 1,328,250 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 100 லீட்டர் கழிவுப் பொதிகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருப்பின் ஓராண்டு கால உத்தரவாதத்துடன் மூடி அமைந்த கழிவுப் பொதிகளை நலன்பெறுநர்களுக்கு அளிக்கக் கூடியதாகவும் 253 கழிவுப் பொதிகளை ரூபா 412,390 க்குக் கொள்வனவு செய்வதற்கும் ரூபா 915,860 சேமிப்பாகப் பெறுவதற்குமான வாய்ப்பிருந்தது.

(ஆ) உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி, பராமரிப்புச் செலவினம், எரிபொருள் சிக்கனம் போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளாது பிரதான

அமைச்சின் தேவைகளுக்கென தலைமைச் செயலாளரால் 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி புலப்படாததும் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டதுமான 2 பெற்றோல் வாகனங்கள் கூடிய எரிபொருள் நுகர்வின் காரணமாக 2012 முதல் பாவனையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தது.

(இ) வைத்தியசாலைப் பணியாளர் ஏறக்குறைய 25 பேரே என்பதாலும் வைத்தியசாலைக்கு அருகே ஏனைய தனியார் சிற்றுண்டிச் சாலைகள் சில இருப்பதாலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,262,483 செலவு செய்த எலயாபத்துவ பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டிருந்தது. சிற்றுண்டிச்சாலையை அமைப்பதற்கான செலவினம் வேறு முக்கிய பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு அற்றுப்போயிருந்தது.

## 6.10 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது மாகாண கமத்தொழில் அமைச்சினால் மஹ இலுப்பள்ளம களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து பெற்ற தொழில் நுட்ப மதிப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் பிரதான அமைச்சினால் சோள விதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன எவ்வாறாயினும், அந்த மதிப்பாய்வு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட 01 கிலோ கிராம் ரூபா 720 வீதப்படியான S – A 501 ரக சோள விதைகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காது 01 கிலோ கிராம் ரூபா 905 வீதப்படியான பெசிபிக் 984 ரக கூடிய விலையுடனான 5,500 கிலோ கிராம் சோள விதைகள் ரூபா 4,977,500 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு செய்தமையால் பிரதான அமைச்சு கூடுதலாகக் கொடுப்பனவு செய்த தொகை ரூபா 1,017,500 ஆகும். அத்தொகையின் 50 சதவீதமாகிய நலன்பெறுநர் உதவு தொகையை நீக்கியபின் மாகாண சபைக்கு ஏற்பட்டிருந்த நிகர நிதிசார் நட்டம் ரூபா 508,750 ஆகும்.

(ஆ) வடமத்திய மாகாண விவசாய அமைச்சு 2013 ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கென 5000 கிலோ கிராம் இறக்குமதி செய்த சோள விதைகளையும் 500 நீர் விசிறும் இயந்திரங்களையும் கொள்வனவு செய்கையில் தொழில்நுட்ப பதிப்பாய்வுக்குழுவானது முறையான

தொழில்சார் கவனமின்றிச் செயற்பட்டமையாலும் தொழில்நுட்ப மாதிரிகளுக்கு உட்படாத விடயங்களைக் கருத்திற் கொண்டு சந்தை விலை தொடர்பான முறையான அறிவின்றியும் பொறுப்பின்றியும் சிபார்சு வழங்கியமையால் குறைந்த விலை ஏற்படாது கூடிய கூறுவிலையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டதால் மாகாண சபைக்கு ரூபா 1,213,500 இழப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே, 2012 ஆம் ஆண்டில் நீர் விசிறும் இயந்திரங்களை வழங்குவதற்கு இணங்கிய வழங்குநர் உசிதமான பொருட்களை வழங்காமையால் காசாக மாற்றப்பட்ட பிணைமுறிப் பெறுமதியாகிய ரூபா 387,700 நீர்விசிறும் இயந்திரங்களை 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய 50 சதவீத நலன்பெறுநர் உதவு தொகையில் ஈடுசெய்யப்பட்டு அதேயளவு வருவாய் இழப்யை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியிருந்தது.

(இ) ராஜாங்கணையாய 05 பிரதேச வைத்தியசாலையின் ஔடதக் களஞ்சியத்தில் ரூபா 94,358 பெறுமதியான 03 ரக ஔடதங்களின் 60,080 கூறுகள் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சாலியுர முதியோர் இல்லத்திற்கான 23 வகை உலர் உணவுப் பொருட்கள் மற்றும் இடியப்பம் வழங்குகையில் சந்தை விலையிலும் கூடிய கூறு விலைக்குக் கேள்வி வழங்கப்பட்டமையால் மீளாய்வாண்டின்போது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 885,955 ஆகும்.

## 6.11 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மதவாச்சி விலங்கின மருத்துவ அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதி என்பவற்றைப் பழுதுபார்ப்பதற்கான 2008 நவெம்பர் 06 ஆந் திகதிய ரூபா 1,792,393 க்கான ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் வேலையானது ஒரு மாதம் 25 நாட்களுக்குள் முடிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும். 2013 ஆகஸ்ட் 29 அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின்போது அச் செயற்திட்டத்தின் சகல வேலைகளும் முடிவடைந்து ஒப்படைக்கப்படாது போனமை புலனாகியது. எவ்வாறாயினும், உடன்படிக்கைப் பிரகாரம் 2013 ஆகஸ்ட் 29 இல் உள்ளவாறான ரூபா 516,504 தாமதக் கட்டணத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கொள்வனவு கைநூலுக்கான 2011 மார்ச் 09 ஆந் திகதிய 22 ஆம் இலக்க மேலதிக வெளியீட்டுக்கமைய, சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்கள் வழங்கப்படுகையில் ஏதாவதொரு நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களது பெறுமதியினதும் கூட்டு மொத்தம் ரூபா 2 மில்லியனுக்கு மேற்படலாகாது. அத்துடன் குறித்த சங்கம் 3 ஒப்பந்தங்களுக்கு மேல் எதனையும் தன்னிடத்தே கொண்டிருத்தல் ஆகாது. எவ்வாறாயினும், கீழே விபரிக்கப்பட்டுள்ள 02 மாகாணத் திணைக்களங்கள் அதற்கு முரணாக நடந்து கொண்ட சந்தர்ப்பங்கள் நிலவின.

| **நிறுவனம்** | **வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களது எண்ணிக்கை** | **வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களது பெறுமதி** |
|---|---|---|
| | | **ரூபா** |
| மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 05 | 2,787,624 |
| அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | 01 | 2,239,483 |
| வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | 03 | 2,869,176 |

(இ) பொறியியல் பெறுமதியானது ரூபா 14 மில்லியனிலும் கூடிய மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் பொலன்னறுவை மாவட்ட உதவிக் கமத்தொழில் பணிப்பாளர் கட்டிட நிர்மாண வேலைக்கு நிதிசார் விதி 422.1 க்கமைய திறந்த போட்டியுடனான கூறு விலைகள் கோரப்பட்டு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவின் மூலம் ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அமைச்சரவை நியமித்த கொள்வனவுக் குழுவிற்கு மாகாண கமத்தொழில் அமைச்சின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 5 ஒப்பந்தகாரர்களது பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் வரம்பிற்குட்பட்ட கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அமைச்சின் செயலாளர் 5 ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தமையானது வெளிப்படையான தன்மையைக் கொண்டிருந்ததற்கான சான்று இருக்காததுடன், கொள்வனவு வழிகாட்டலின் 2.4.1 க்கமைய வரம்பிற்குட்பட்ட கூறு விலைகளைக் கோரும்போது சகல பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்தும் கூறு விலைகள் கோரப்படாதிருந்தது.

## 6.12 பதவியணியினர் நிர்வாகம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

**மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள்**

| | | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | மேலதிகம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட | 601 | 305 | - | (296) |
| (ii) | மூன்றாம் நிலை | 320 | 225 | - | (95) |
| (iii) | இரண்டாம் நிலை | 3534 | 2134 | - | (1400) |
| (iv) | ஆரம்ப நிலை | 1694 | 1213 | - | (481) |
| (v) | ஏனையவை (சமயாசமய / தற்காலிக) | 26 | 665 | 639 | - |
| | | 6175 | 4542 | 639 | (2272) |

6.12.1 பின்வருவனவும் அவதானிக்கப்பட்டன.

மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 345 ஆகும். எனினும், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 172 பதவி வெற்றிடங்கள் நிலவின. அதில் 118 பதவிகள் கமத்தொழில் அபிவிருத்தியில் நேரடியாகத் தொடர்புடையன என அவதானிக்கப்பட்டது. அப்பதவிகள் நெடுங்காலமாக வெற்றிடமாக இருப்பது வட மத்திய மாகாண கமத்தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் மற்றும் கமத்தொழில் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்குக் காரணமாயிற்று, அவ்வாறே, திணைக்களத்தில் நிலவும் 22 தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 2009 நவம்பர் 25 க்குப் பின்னர் நிரந்தர

பதவிகளுக்குப் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி தற்காலிக, சமயாசமய, பிரதியீட்டு ஒப்பந்த சலுகை அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த 2009 நவம்பர் 25 ஆந் திகதிய 20/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அத்தினத்தின் பின்னர் சமயாசமய/கமத்தொழில் அமைச்சின் செயலாளரால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

6.12.2 பாடசாலைப் பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான, மேலதிக மற்றும் பற்றாக்குறை தொடர்பான விபரம் பின்வருமாறு.

| | | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளவாறானது** | **மேலதிகம்** | **வெற்றிட எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 998 | 798 | - | 200 |
| (ii) | ஆசிரியர்கள் | 15940 | 13821 | - | 209 |
| (iii) | உதவி ஆசிரியர்கள் | - | 590 | 590 | - |
| (iv) | திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர் / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்/ ஆய்வுகூட உதவியாளர் விடுதி மேற்பார்வையாளர் | 878 | 60 | - | 818 |
| (v) | சிற்றூழியர் | 757 | 62 | - | 695 |
| (vi) | ஏனையவை | - | 25 | 25 | - |
| | | 18573 | 15356 | 615 | 3832 |

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கலென்பிந்துனுவெ, கெக்கிராவை, தம்புத்தேகம, அநுராதபுரம் மற்றும் கெபிதிகொல்லேவ கல்வி வலயப் பாடசாலைகளின் 19 ஆசிரியர்களும் முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் ஒருவரும் மாகாண சபைக்கும் மத்திய அரசாங்க

நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர். மாகாண கல்வித் திணைக்களத்தால் மீளாய்வாண்டின்போது அவ்வுத்தியோகத்தர்களுக்கு ரூபா 5,322,057 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த நிறுவனங்களால் அத்தொகை மீளளிப்புச் செய்யப்படவில்லை.

(ஆ) தரப்படுத்தப்பட்ட பாடசாலை திம்புலாகல, கலென்பிந்துனுவவெவ, அநுராதபுரம் கல்வி வலயங்களில் உள்ள 3 மஹாவித்தியாலயங்களிலும் 6 ஆரம்ப பாடசாலைகளிலும் பிரதிப் பாடசாலை அதிபர்களாகவும் ஹிங்குராங்கொடை கல்வி வலயத்தின் தரப்படுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் 10 பேர் மஹா வித்தியாலயங்களில் பதில் பாடசாலை அதிபர்களையும் நியமிக்கபட்டிருந்துடன் 4 மஹாவித்தியாலயங்கள் அடங்கலாக 141 பாடசாலைகளில் பதில் பாடசாலை அதிபர்களாக ஆசிரிய சேவையில் 1,2-1,2-11 மற்றும் 3-4 தரங்களிலுள்ள ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) கெபிதிகொல்லேவ மற்றும் அநுராதபுரம் கல்வி வலயங்களில் உள்ள 44 பாடசாலைகளின் பாடசாலை ஆய்வுகூடங்களுக்கு 375 கணனிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், அப்பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பயிற்சி ஆசிரியர்கள் இன்மையால் கணணி ஆய்வுகூடம் பயனற்றிருந்தது.

(ஈ) அநுராதபுரம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 6 – 11 ஆந் தரங்களில் 263 மேலதிகமும், 152 ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவியபோதும், நகரை அண்மித்த 04 பாடசாலைகளில் அத்தரங்களில் 48 ஆசிரியர்கள் மேலதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளவாறானது** | **மேலதிகம்** | **பற்றாக்குறை** |
|---|---|---|---|---|---|
| (i) | விசேட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 21 | 09 | - | 12 |
| (ii) | தரப்படுத்தப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 356 | 278 | - | 78 |
| (iii) | ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்கள் | 85 | 90 | 5 | - |
| (iv) | தாதியர் (வைத்தியசாலை) | 590 | 464 | -- | 126 |
| (v) | மத்திய மட்ட தொழில் நுட்ப | 31 | 19 | - | 12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் | | | | |
| (vi) | தொழிலாளர் (சாதரணதரம்) | 182 | 222 | 40 | - |
| (vii) | தொழிலாளர் (துப்பரவுப் பணி) | 329 | 225 | - | 104 |
| (viii) | சிற்றூழியர் | 350 | 234 | - | 116 |
| | | 435 | 334 | - | 101 |
| | | 2379 | 1875 | 45 | 549 |

## 6.13 வாகனப் பயன்பாடு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள் / திணைக்களங்கள் நான்கினது 25 வாகனங்களின் மைல் காட்டிகள் செயலற்ற நிலையில் இருந்தன.

(ஆ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் 2 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6.14 வங்கிக் கணக்கிணக்கம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலான 3 நிறுவனங்களது 5 வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டு 6 மாதங்கடத்தும் தேறாதிருந்த ரூபா 1,082,578 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 188 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலான 19 நிறுவனங்களது 28 வங்கிக்கணக்கிலிருந்து வரையப்பட்டு கடந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 11,415,729 க்கான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 (இ) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மாகாண சபையின் 3 அமைச்சுக்களதும் திணைக்களங்களதும் 5 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத செலவாக ரூபா 5,457,864 மற்றும் 7 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத வரவாக ரூபா 713,094 என்பன இருந்தன.

## 07. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 7.1 செயல் திட்டம்

பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5/(4) இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை மற்றும் அதன் ஒவ்வொரு அமைச்சும் திணைக்களமும் நிறுவனமும் மீளாய்வாண்டிற்கான செயல் திட்டங்களைத் தயாரித்திருக்கவில்லை.

### 7.2 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையினது அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஏனைய நிறுவனங்களது தவறுகளையும் மோசடிகளையும் தவர்த்துக் கொள்வதற்கும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகளை இணங்கண்டு அந் நலிவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை உயர் முகாமைத்துவத்திற்கு அறிவிப்பது மாகாண உள்ளக மற்றும் விசாரனைத் திணைக்களத்தின் பிரதான பணியாகும். எனினும், ஒவ்வொரு ஆண்டிற்குமான கணக்காய்வு மற்றும் விசாரணைப் பணிகளை ஒப்படைத்தல் மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகார சபை அடங்கலான சகல நிறுவனங்களதும் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள முக்கிய குறைபாடுகளை இனங்காணக்கூடிய வகையில் நடைபெறவில்லை என்பது மீளாய்வாணடின்போது வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் உறுதியாயிற்று.

### 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சொத்துக்கள்

2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களது கூட்டம் குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவையாவது நடைபெற

வேண்டும். எனினும், மீளாய்வாண்டின்போது மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சு / திணைக்களம் என்பன ஒரேயொரு முறை மாத்திரமே கூட்டங்களை நடாத்தியிருந்தன.

## 7.4 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கைப் பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் 2013 ஆம் ஆண்டின் பொருட்டு பொருட் கொள்வனவுத் திட்டங்களைத் தயாரித்திருக்கவில்லை.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

**8.1** மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்பம், கலாசார அலுவல்கள் தொடர்பான அமைச்சினால் ரூபா 443,220 பெறுமதியான 3 டிஜிடெல் கெமராக்கல் மற்றும் 3 புகைப்படப் பிரதி இயந்திரங்கள் என்பவற்றைக் களஞ்சியத்திற்குக் கொண்டு வராது கொள்வனவு செய்த உத்தியோகத்தரே அவற்றைப் பல்வேறு நபர்களுக்கும் பிரிவுகளுக்கும் விநியோகித்திருந்தார்.

**8.2** கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) நிலையான சொத்துக்கள்
(உ) நிதியப் பயன்பாடு
(ஊ) மனிதவள முகாமைத்துவம்
(எ) செயற்திட்டங்களை திட்டமிடலும் அமுலாக்கலும்
(ஏ) கொள்வனவு நடைமுறை
(ஐ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஒ) வரவு மற்றும் மேலதிக நேரக் கட்டுப்பாடு